# கிறிஸ்தவக் கீர்த்தனைகளின் சிறப்பும் இன்றைய நகர்ப்புறத் திருச்சபைகளின் பரிதாப நிலையும்

இசை கடவுளின் அருள் ஈவு, ‘‘இசை கேட்டால் புவி அசைந்தாடும் அது இறைவன் அருளாகும்’’. மாந்தர்கள் இசைந்து வாழ இசை உதவுகிறது. எல்லா இசைகளும் இறைவன் சமூகத்தில் சம மதிப்புடையவை. ஆனால் வரலாற்றில் இந்த உண்மை மறுக்கப்பட்டு ஆதிக்க சக்திகளின் (அரசியல், பொருளாதாரம், சமூகம் சார்ந்த ஆதிக்க சக்திகள்) இசையும் கலைகளும் சிறப்பானவை என்றும் சிறுபான்மையினர், ஏழைகள், ஒடுக்கப்பட்டோரின் இசையும் கலையும் மதிப்புக் குறைந்தவைகளாக மதிப்பிடப்படுவதும் வழக்கமாகிவிட்டது. இதற்கு நல்ல எடுக்காட்டுகளாக இன்று திருச்சபைகளில் குறிப்பாக நகர்புற திருச்சபைகளில், பயன்படுத்தப்படும் பாமாலைகள், கிராமப்புறத் திருச்சபைகளில் பயன்படுத்தப்படும் முழுக்க முழுக்க சமஸ்கிருத ஆதிக்கமுடைய கீர்த்தனைப் பாடல்களும் உள்ளன.

இக்கட்டுரையில் நான் **இரு பகுதிகள்** வைத்துள்ளேன். முதல் பகுதியில் இன்றைய திருச்சபைகளில் இந்திய இசை பயன்படுத்தப்பட வேண்டியதின் அவசியம் பற்றியும் இரண்டாவது பகுதியில் இந்தியாவில் உள்ள கிராமப்புற திருச்சபைகளில் கீர்த்தனைகள் எவ்வாறு பொருள் பொதிந்த முறையில் பயன்படுத்தப்படலாம் என்பது பற்றியும் விளக்க முற்படுகிறேன்.

**பகுதி ஒன்று**

**குழல் சார்ந்த இசையின் முக்கியத்துவம்** (The Important of contextual – Local – Music and Arts)

இசை மக்கள் வாழ்வுடன் இசைந்தது. ஒரு குறிப்பிட்ட மக்களின் அரசியல் பொருளாதார சமூகக் கலாச்சார அம்சங்கள் அவர்களது கலையிலும், இசையிலும் வெளிப்படும் என்பதிலே ஐயமில்லை. அந்த மக்களின் அனுபவங்கள், விருப்பங்கள், எதிர்பார்ப்புகள், தோல்விகள், வெற்றிகள் ஆகியவை அனைத்தும் இசையாக வெளிப்படக்கூடியவை.

இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு –இஸ்ரவேலரின் கவிதைகள் அடங்கிய திருமறைப்பகுதியாகும். குறிப்பாக சங்கீதங்கள் என்று அழைக்கப்படும் திருப்பாடல்களில் இதை வலுவாகக் காண முடிகிறது. அவர்கள் எகிப்திலும், பாபிலோனிலும் அடிமைகளாக இருந்ததையும் கடவுள் அத்தகைய அடிமைத்தனங்களில் இருந்து எவ்வாறு தங்களை விடுதலை செய்தார் என்பதை தங்கள் பாடல்களில் அவர்கள் வெளிக்கொணர்ந்திருப்பதை நாம் காண இயலும் (சங் 105) இதை இன்று நமது திருச்சபையில்

பெரும்பாலாகப் பயன்படுத்தப்படும் பாடல்களோடு ஒப்பிட்டு பார்க்கும் போது நமது தமிழ் மக்களின் அரசியல் பொருளாதார, சமூகக் கலாச்சார அனுபவங்கள் நாம் பாடும் மேற்கத்திய நாட்டுப் பாமாலைகளில் கொஞ்சமேனும் இல்லை என்பதே உண்மையாகும்.

அந்தப் பாமாலைகள் அனைத்தும் மேற்கத்திய ஆசிரியர்களால் அவர்களின் மேற்கத்திய அனுபவங்களோடு எழுதப்பட்டவை. அவைகளில் நமது சூழல் சார்ந்த அனுபவங்களைக் காண்பது அரிது.

**இரண்டாவது**

திருப்பாடல்களில் உள்ள இசை எபிரேயர்களின் வாழ்வுடன் தொடர்புடைய இசையாகும். அங்கு குறிப்பிட்டுள்ள இசைக்குறிப்புகள், இசைக்கருவிகள் அந்த மக்களின் அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்பட்டவையாகும்.

எ.கா. கீழ்கண்ட சங்கீதங்களின் முகவுரையை - தலைப்பை வாசித்துப் பார்க்கவும், என்ன இசை, என்ன ராகம், என்ன இசைக்கருவி என்பது குறிக்கப்பட்டுள்ளதைக் காண்க.

சங்கீதம் 6, 8, 9, 12, 45, 46, 53, 54, 55……

சங்கீதம் 150-ல் எத்தகைய இசைக்கருவிகள் என்பது பற்றியும் பார்க்கலாம்.

இதனை மனதில் வைத்துப் பார்க்கும் போது இன்றைய திருச்சபையில் பாடப்படும் பாமாலைகள் எந்தவிதத்திலும் இந்திய இசை அல்ல. அதற்காகப் பயன்படுத்தப்படும் இசைக்கருவியாகிய, ஆர்கனும் நமது சூழலுக்குப் பொருத்தமானதல்ல.

இன்று திருச்சபைகளில் பாடப்படும் பாமாலைகள் திருச்சபைக்கு வெளியே இருக்கும் சாதாரண மக்களுக்குக் கொஞ்சமேனும் புரியவில்லை என்பதை கீழ்காணும் நகைச் சுவைக் கதை விளக்குகிறது.

ஒரு திருச்சபை வழிபாட்டுக்கு ஒரு முதிய அம்மையாரை ஒவ்வொரு ஞாயிறும் ஒரு ரிக்ஷாக்காரர் அழைத்து வருவார். அவர் கிறிஸ்தவர் அல்லர். ஆகவே வழிபாடு முடியும்வரை வழிபாட்டுமனைக்கு வெளியே நின்று கொண்டிருப்பவர். அவ்வாறு அவர் ஒருநாள் நிற்கையில் ஒருவர் வந்து “எப்போது வழிபாடு முடியும்?” என்று கேட்டார். அதற்கு இந்த ரிக்ஷாக்காரர் சாமி மொத்தமா மூன்று கூச்சல்கள் போடுவார்கள். ஒவ்வொரு கூச்சலும் ஐந்து நிமிடம் நீடிக்கும். இதுவரை இரண்டு கூச்சல் முடிந்துவிட்டன. இன்னும் கொஞ்ச நேரத்தில் மூனாம் கூச்சல் வரும். அது முடிந்தவுடன் எல்லாரும் வெளியே வந்துவிடுவார்கள்” என்றாராம்.

இதற்கு மாறாக இன்றைய அனேக ரோமன் கத்தோலிக்க சபை வழிபாடுகளில் பயன்படுத்தப்படும் அழகிய இந்திய இசையும், இசைக்கருவிகளும் வழியில் போகிறவர்களையும் கூட சற்று நின்று கவனித்துக் கேட்டுவிட்டுப் போக வைக்கிறது என்பதையும் சில கிறிஸ்தவரல்லாத நண்பர்கள் கூற நான் கேட்டுள்ளேன்.

இதற்கு முக்கிய காரணம் என்னவெனில் தமிழிசை உணர்வுகளை அவர்களது அனுபவம் சார்ந்து வெளிப்படுத்தக் கூடியவை. எ.கா : மகிழ்ச்சிக்கு ஒரு ராகம். சோகத்துக்கு இன்னொரு ராகம், காலைக்கு ஒரு ராகம், மாலைக்கு இன்னொரு ராகம், வீரத்துக்கு ஒரு ராகம், அமைதிக்கு மற்றொரு ராகம். தமிழிசை மக்களின் உணர்வுகளைத் தட்டி எழுப்பக்கூடியது. ஆகவே இன்றையத் திருச்சபைகள் தங்கள் சொந்த கலாச்சாரம், கலை இசைகளைத் தங்கள் வழிபாட்டில் பயன்படுத்த வேண்டியது அவசியமாகிறது. அதை விடுத்து எனக்கு கீர்த்தனை தெரியாது, பாமாலை மட்டுமே பாடுவேன்'' என்று பெருமையாக எண்ணிக் கொள்வது பெருமை அல்ல. பரிதாபத்துக்குரியதாகும்.

கல்யாணி, காம்போதி, கானடா போன்ற ராகங்கள் நமது இராகங்கள். அவைகளை எத்தனை கிறிஸ்தவர்கள் அறிந்துள்ளனர்? அதே போல் திருச்சபைகளில் குறிப்பாக, நகரத் திருச்சபைகளில் - பயன்படுத்தப்படும் நம்நாட்டு இசைக்கருவிகள் எவை? ஏன் தபேலாவும், மிருதங்கமும், நாதஸ்வரமும், தவிலும், பறையும், பம்பையும், கும்மியும், ஒயிலும் திருச்சபைகளில் பயன்படுத்தப்படுவதில்லை. அப்படிப் பயன்படுத்தப்படும் வரைக்கும் இந்தியத் திருச்சபைகள் இந்திய சபைகளாக இருக்கவே முடியாது.

நான் இரண்டாவது பகுதிக்குப் போகும் முன் நமது கீர்த்தனைகள் நகரத் திருச்சபைகளில் இராகம் மாற்றிப் பயன்படுத்தப்படுவதால் ஏற்படும் தீமைகளையும் சுருக்கமாக சுட்டிக் காட்டுவது நல்லது என எண்ணுகிறேன்.

நமது கீர்த்தனைகளின் ஆசிரியர்கள் அவைகளை எழுதிய போது கொடுத்த இராகங்கள் காலப்போக்கில் மாற்றப்பட்டு ஒவ்வொரு பகுதியிலும் வேறு வேறு வகையில் பாடப்படுவது மிகவும் வருந்தத் தக்கதாகும். அப்படி orginal இராகத்தை மாற்றிப் பாடுவதால் கருத்துமாற்றமும் அதனால் இறையியல் பிழையும் கூட ஏற்படுகிறது என்பது கண்கூடு எ.கா.

கீர்த்தனைகளில் ''ஆத்துமமே என் முழு உள்ளமே'' என்று தொடங்கும் பாடல் துவக்கத்தில் ஆனந்த பைரவி எனும் இராகத்தில் எழுதப்பட்டு இன்றும் கீர்த்தனை நூலில் அதே ராகம்தான் உள்ளது. ஆனால் இன்று அந்தப்பாடல் பரவலாகப் பாடப்படும் ராகம் சங்கராபரணம் ஆகும். இவ்வாறு பழைய (முதலில் கொடுக்கப்பட்ட) இராகங்களை மாற்றி சங்கராபரணத்தில் பாடுவது பெரும்பாலும் நடைபெறுகிறது. சங்கராபரணத்தில் பாடுவது ஒருவேளை சுலபமாக இருந்தாலும் பாடும் முறையில் அதி பயங்கரமான கருத்துமாற்றம் ஏற்பட்டுள்ளது. அதாவது ஒவ்வொரு சரணமும் பாடி முடிந்தபின் கீர்த்தனையில் அச்சிட்டுள்ளபடி 'ஆண்டவரைத் தொழுதேத்து' என்று உள்ளது. ஆனால்

இப்போது சங்கராபரணத்தில் பாடும் முறையில் சரணம் பாடி முடிந்தபின் ‘ஆத்துமமே’ என்று தொடங்குவது தவறாகும்.

அதாவது

தலைமுறை தலைமுறை தாங்கும் வினோத
உலகமுன் தோன்றி ஒழியாத – ஆத்துமமே.

‘உலகமுன் தோன்றி ஒழியாதவர்’ ‘ஆண்டவர்’ தான் ஆத்துமம் அல்ல. இது எப்படி இருக்கிறதென்றால் ஆண்டவரை வைக்கவேண்டிய இடத்தில் ஆத்துமத்தை வைக்கிறோமோ என்று எண்ணத்தோன்றுகிறது. இதுபோன்ற இறையியல் பிழைகள் இப்படி இராகம் மாற்றிப் பாடுவதால் ஏற்படுகிறது.

**இரண்டாம் பகுதி**

**கிராமப்புறத் திருச்சபையில் கீர்த்தனைகள் சில சிறப்புகள்**

ஆலோசனைகளும்

நான் ஏற்கனவே கூறியபடி இந்த இரண்டாம் பகுதியில் நமது கிராமப்புறத் திருச்சபைகளில் கிறிஸ்தவக் கீர்த்தனைகள் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றன என்பது பற்றியும் இன்னம் கூடுதலாக எவ்வாறு பொருள் உள்ள முறையில் பயன்படுத்தலாம் என்பது பற்றியும் சுருக்கமாக கூற விழைகின்றேன்.

முதலாவதாக கீர்த்தனைகளின் Original ராகங்கள் எல்லாம் கிராமங்களில்தான் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. ஆகவே இன்றைய நகர்புறத் திருச்சபை கிறிஸ்தவர்கள் கிராமப்புறங்களில் சென்று கிறிஸ்தவக் கீர்த்தனைகளைக் கற்றுக்கொள்ள வேண்டும். அதை விடுத்து கிராமப்புறக் கிறிஸ்தவர்களுக்குப் பாமாலைகளைக் கற்றுக்கொடுத்து அவர்களை கெடுக்காமல் இருப்பது நல்லது.

அதே வேளையில் நமது கிறிஸ்தவக் கீர்த்தனைகளில் உள்ள இராகங்களை மாற்றாமல் ஆனால் அக்கீர்த்தனைகளில் உள்ள சமஸ்கிருதச் சொற்களை மாற்றுவது அதிகம் தேவைப்படுகிறது. நமது கீர்த்தனைகளில் சில மணிப்பிரவாள மொழிநடை என்று கூறப்பட்ட சமஸ்கிருத ஆட்சியின் கால மொழி நடையில் உள்ளவை. இவைகள் இன்றைய நம் கிராமப்புறக் கிறிஸ்தவர்களுக்கு கொஞ்சமும் புரியாதவை எ.கா.

அரூபியே, அரூப சொரூபியே எனத் தொடங்கும்
கீர். 94 (பழையது 111) காண்க

பம ஆளம் பரிசுத்த ரூபியே

சேனாவதி ராகம் ரூபக தாளம்

பல்லவி

அரூபியே, அரூப சொரூபியே, - எமை
ஆளும் பரிசுத்தரூபியே அரூப சொரூபியே

அனுபல்லவி

திருவினாடுறை நிதான கருணையா திபதி மோன
சுரநரர் வணங்கும் வான ஒரு பரா பர மெய்ஞ்ஞான - அரு

**சரணங்கள்**

1. ஆதி காரண அரூபியே – அசரீரி சத்ய
நீதி ஆரண சொரூபியே
வேத வாசக சமுத்ர ஓதும் வாய்மைகள் சுமுத்ர
தீதிலா துயர் விசித்ர, ஜாதி யாருட பவித்ர – அரு

2. சீரு வாவிய தெய்வீகமே – திரி முதல் ஒரு பொருள்
ஏரு லாவிய சிநேகமே,
பாருளோர் பணிந்து போற்றும் ஆரியா, அடியர் சாற்றும்
நேரமே புகழை ஏற்றும்; வீரமாய் மனதை ஆற்றும் - அரு

3. பத்தர் பாதகம் அடாமலே, - பசா சுலகுடல்
சத்ரு சோதனை படாமலே
அத்தனார் தேவ கோபம், நித்ய வேதனைகள் சாபம்
முற்றும் மாறிடத் தயாபம் வைத்து நீடுன் ப்ரதாபம் - அரு

- வே.சாஸ்திரியார்

மேலே கண்ட இந்த கீர்த்தனையின் வார்த்தைகள் ஏதாவது ஒரு கிராமப்புற கிறிஸ்தவ ஏழை விசுவாசிக்கு விளங்குமா? நிச்சயம் 95 விழுக்காடு விளங்காது. பிறகு ஏன் இதை வைத்திருக்க வேண்டும்? இரண்டு காரியம் செய்யலாம். (1) இதை கிராமப்புற கிறிஸ்தவர்களுக்கு புரியும் வரையில் மாற்றி எழுதலாம். (2) இதை நீக்கி விட்டு அவர்களும் நாமும் புரியும் வகையில் புதிய கிராமிய மொழி நடையில் அமைந்த கீர்த்தனைகளை எழுதிச் சேர்க்கலாம். இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு புதிய கிறிஸ்தவக் கீர்த்தனைகளில் உள்ள 409-வது பாடலாகும்.

நற்செய்திப்பணி

பல்லவி

இனிக்காத தேனுமில்லை
மின்னாத பொன்னுமில்லை
கிறிஸ்தேசு நாயகரின் - நற்செய்திதன்னை
அறிவிக்காம கிறிஸ்தவனேயில்லை

கத்தியழைச்சி மொத்தமாகக் கூடி
காக்கைகள் உண்பது போல – நாம்
பெத்த இன்பத்தை மத்தவரோட
பகிர்ந்தளிக்கணுந்தானே.

உப்பத்த மீன்குழம்பு
குப்பைக்கு போவதுபோல்
அப்பன் கிறிஸ்தையனின் - நற்செய்தி தன்னை
அறிவிக்காம கிறிஸ்தவனேயில்லை
பெத்துவளத்து பத்துங் கொடுத்த
உத்தமங்கப் பத்திச் சொல்ல – நாம்
வெக்கத்தை கொண்டா அக்கம் பக்கத்தார்
துப்பிச்சிரித்திடுவாங்க
பத்துக்கோடி பெத்தவங்க
மொத்த அன்பை கூட்டினாலும்
உத்தமரின் அன்பாகுமோ – அதை சொல்லமறந்தா
உசிரில்லாத வெறும் பொணமா ஆவானே

**- ஜே.தியாபிலஸ் அப்பாவு**

**இரண்டாவதாக :**

இன்று கிராமப்புறத் திருச்சபைகளில் கீர்த்தனைகள் பயன்படுத்தும் போது ஆர்மோனியமும் மற்றும் கிராமப்புற இசைக்கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன. அது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஆனால் இன்றைய கிராமப் புறங்களில் இருக்கும் திருச்சபைகளில் பயன்படுத்தப்படும் ஆர்மோனியங்களை ஓரத்தில் வைத்துவிட்டு நகரத் திருச்சபைகளில் பயன்படுத்தப்பட்டு ஒதுக்கப்பட்ட பழைய ஆர்கன்களை கிராமப்புறங்களுக்கு இறக்குமதி செய்வது கொஞ்சம் கொஞ்சமாக நடைபெற்று வருகிறது. கிராமப்புறக் கிறிஸ்தவர்கள் தங்களின் உயிர்க் கலைகளான நாட்டுப்புற இசையையும் நாட்டுப்புற இசைக்கருவிகளையும் தாழ்வாகக் கருதும்படி கற்றுக்கொடுக்கப்படுகின்றனர். இது ஒரு கீழ்த்தரமான நகர்புற மக்களின் முயற்சியாகும். இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

கிராமப்புறக் கலைகளான உருமி, மேளம், நாயனம், பம்பை, மத்தளம், கும்மியாட்டம், ஒயிலாட்டம், சிலம்பாட்டம், முதலியன உற்சாகப் படுத்தப்பட வேண்டும். பறையாட்டம், தலித் கலை விழாக்கள் மூலம் மறுமலர்ச்சி பெற்று வருகிறது. அது மேலும் வலுப்படுத்தப்பட்டு கிராமப்புற மக்கள் தங்கள் மண்ணின் கலைகளின் மேல் மதிப்பும் ஆர்வமும் கொள்ள வேண்டும். கிராமப்புற இசையும், கலையும் தாழ்வானது. கர்நாடக இசையும் பரதநாட்டியமும் மட்டுமே உயர்வானவை என்ற இழிவான சிந்தனைகள் மறைய வேண்டும்.

ஆக மொத்தத்தில் இந்தியாவில் உள்ள திருச்சபை இந்தியத் திருச்சபையாகவும் தமிழகத் திருச்சபைகள் தமிழ்ச் திருச்சபைகளாகவும் இருக்க தமிழிசையும் கீர்த்தனைகளும் குறிப்பாக கிராமப்புறக் கலையும், இசையும் மிகவும் கருத்துடன் பயன்படுத்துதல் அவசியமாகிறது. அப்போது தான் இந்தியாவில் கிறிஸ்தவம் வளரும்.

**முனைவர் எம்.ஞானவரம**